இந்துசமய அறநிலையத்துறை

# யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாம் 2015–16

தேக்கம்பட்டி – மேட்டுப்பாளையம்

மின்னஞ்சல் : elephantcamp@tnhrce.org

நாள் 09.02.2016

கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், தேக்கம்பட்டி அருள்மிகு வனபத்ரகாளியம்மன் திருக்கோயில் அருகிலுள்ள பவானி ஆற்றுப்படுகையில் நடைபெற்று வரும் யானைகள் சிறப்பு நலவாழ்வு முகால் நடைபயிற்சி மேற்கொண்ட யானைகள் பூவாளி குளியல் மேடையில் ஆனந்தமாய் நீராடி காலை உணவு மற்றும் சத்து மாத்திரைகள்உண்டு தமது இடங்களுக்கு சென்று ஓய்வெடுக்கத் துவங்கின. கூந்தல்பனை, தென்னை மட்டை ஆகிய பசுந்தீவனங்கள் வழங்கப்பட்டது. மாலையில் நடைபயிற்சி மேற்கொண்ட யானைகள் மாலை உணவருந்தி ஓய்வெடுக்கத் துவங்கின. இன்று (09.02.2016) அதிகாலை சுமார் 12.30 மற்றும் காலை 6.00 மணியளவிலும் காட்டு யானை ஒன்று முகாம் அருகில் உள்ள ஆற்றை கடந்து முகாமிற்கு வர எத்தனைத்த போதும் இரவு 10 மணியளவில் முகாம் அலுவலகத்திற்கு எதிரில் உள்ள அடர்ந்த வனப்பகுதியில் இருந்து முகாமிற்கு வர எத்தனைத்த போது வனத்துறை பணியாளர்கள், முகாம் பாதுகாப்பு பணியாளர்கள் ஒருங்கிணைந்து பட்டாசு வெடித்தும், சத்தம் எழுப்பியும், யானை காட்டுக்குள் விரட்டப்பட்டது. இதனால் முகாமில் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை.

